**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : C.C. No. 40 /2010

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 1

Defence

Court

Name : திரு. எஸ். மாதவன்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 14.6.2018

முதல்விசாரணை

நான் தற்போது போடி போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.7.2009 ம் தேதி காலை 10.30 மணிக்கு ரகசிய தகவல் பேரில் சார்பு ஆய்வாளருடன் நானும் த.கா. 1011 என்பவரும் போடி இரட்டை வாய்க்கால் பக்கம் ரோந்து செய்துக்கொண்டிருந்த போது சந்தேகப்படும்படியாக இருந்தவரை அவர் அருகில் சென்று நாங்கள் காவல் துறையினர் என்று அறிமுகம் செய்துக்கொண்டு பின்னர் பெயர் விலாசம் கேட்ட போது போடி புதுார் வலசுதுரை ரோட்டில் குடியிருக்கும் பிச்சை மகன் சக்திவேல் என்று தெரியவந்தது. அவரை சந்தேகத்தின் பேரில் பிடித்து அருகில் உள்ள நீதித்துறை நடுவர் முன்போ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரி முன்போ சோதனை செய்யவேண்டுமா என்று கேட்ட போது தேவையில்லை

என்று தாங்களே என்னை சோதனை செய்யலாம் என்று கூறினார். எதிரியிடம் இருந்து சார்பு ஆய்வாளர் சோதனை சம்மத கடிதம் பெற்றார். பின்னர் அவர் கையில் வைத்திருந்த வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை பார்த்த போது அதில் கஞ்சா இருந்தது தெரியவந்தது. பின்னர் அதை வில் தராசு மூலம் எடைப்போட்டு பார்த்த போது 1.100 கிலோகிராம் எடையிருந்தது. அதில் இருந்து மாதிரிக்காக தலா 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்கள் கஞ்சாவை எடுத்து காக்கி பேப்பரில் மடித்து நூலால் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைக்கப்பட்டது. மீதமுள்ள கஞ்சாவை வெள்ளை நிற பிளாஸ்டிக் பையில் வைத்து கட்டி போலீஸ் பட்டன் சீல் வைக்கப்பட்டது. தனிநபர் சாட்சிகள் இல்லாத காரணத்தினால் அத்தாட்சியில் நானும் த.காக.1011 அண்ணாத்துரை என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.1 ஆகும். அரசு அனுமதியில்லாமல் கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக அவரை கைது செய்து நிலையம் 11.30 மணிக்கு கொண்டு வந்து நிலைய கு.எண். 453-2009 பிரிவு 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

தகவல் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. காலை 10.20 மணிக்கு காவல்நிலையத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் புறப்பட்டோம். சம்பவ இடம் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி தான். சம்பவ இடத்தில் மொத்தம் எத்தனை ஆவணங்கள் எழுதப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. சார்பு ஆய்வாளர் தான் ஆவணங்களை எழுதினார். சோதனை சம்மத கடிதம் மற்றும் அத்தாட்சியில் நேரம் 10.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை ஒரு முறை மட்டுமே எடைப்போட்டு பார்த்தோம். அத்தாட்சியின் நகல் எதிரிக்கு வழங்கப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு எழுத படிக்க தெரியுமா என்று எனக்கு தெரியாது. 11.30 மணிக்கு நிலையத்திற்கு திரும்பி வந்தோம். வழக்கு சொத்துக்கு தனி குறியீடுகள் எதுவும் வழங்க வில்லை என்றால் அது பற்றி எனக்கு எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் எதிரியை சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்றும் வழக்கு சொத்துக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும்

காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்து சார்பு ஆய்வாளர் போட்ட பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு எழுத படிக்க தெரியாது என்றும் அவருக்கு படித்து காண்பித்து அவர் புரிந்து கொண்டதாக எந்த ஆவணத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை காவல்நிலையத்தில் வைத்து மிரட்டி அவரிடம் கைரேகை பெறப்பட்டு பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை.